**சார்பு நீதிமன்றம், அவிநாசி**

**OS – 9/2020**

நாள் 04.11.2025

PW1 – லோகநாதன்

த/பெ – அம்மாசை கவுண்டர்

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 04th day of November 2025)**

**1 முதல் 6, 38 முதல் 48 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1. இந்த வழக்கை எனது அப்பா அம்மாசை கவுண்டர் தான் தாக்கல் செய்தார் என்றால் சரிதான். நான் 1974–ம் ஆண்டில் பிறந்தேன். நான் சொன்ன விபரத்தின் பேரில் தான் எனது முதல் பிரமாண வாக்குமூலம் தயார் செய்யப்பட்டது. எனது அம்மா அம்மாசையம்மாள் இறந்து போய்விட்டார். நான் நாகம்மாளுக்கு தான் மகனாக பிறந்தேன் என்றால் சரிதான். எனது அம்மா நாகம்மாள் தற்போதும் உயிருடன் தான் இருந்து வருகிறார். அதனால், எனது பிரமாண வாக்குமூலத்தில் எனது தாயார் என்னை மட்டும் அவரது வாரிசாக விட்டு விட்டு இறந்து போய்விட்டார் என்று சொல்லியுள்ளது தவறு என்றால், எனது அப்பாவின் முதல் மனைவி அம்மாசையம்மாள் என்பதால் அவர் இறந்து போய்விட்டதால் அவருடைய வாரிசு நான் தான் என்பதால் எனது பெரியம்மாவை எனது அம்மா என்று சொல்லியுள்ளேன். மேற்படி விபரத்தை தாவா பிராதுவில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

2. எனது அப்பாவிற்கு விற்பனை செய்த நபர்களுக்கு மூலபத்திரம் மற்றும் பத்திரங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளோமா? என்றால் அதற்கு பதிவு ஆவணங்கள் கிடையாது. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.4 ஆவணங்களில் அசல் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை

என்றால் அந்த அசல் ஆவணங்கள் எங்கு உள்ளது என்று எனக்கு தெரியவில்லை. வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.4 கிரைய ஆவணங்கள் 1967–ம் ஆண்டு வாக்கில் ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த காலத்தில் நான் பிறக்கவே இல்லை என்றால் சரிதான். நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள பைசுல்லா சாய்பு என்பவருக்கு அசதுல்லா சாயபு, அசுதீன் சாயபு, பாவுதீன் சாயபு என்ற 3 ஆண்மக்களும் மற்றும் ஆஹீபீபி என்ற ஒரு பெண் மகளும் வாரிசுகள் என்பதற்கு அதற்குரிய வாரிசு சான்று தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள ரீ–சர்வே செட்டில்மெண்ட் ரிஜிஸ்டர் வா.சா.ஆ.12–ன் படி யார் பெயருக்கு பட்டா ஏற்பட்டது என்றால் பைசுல்லா சாய்புவுக்கு தான் பட்டா கொடுக்கப்பட்டது. அந்த பைசுல்லா சாய்பு இறந்துபோன பிறகு 1967–க்கு முன்பு சொத்திற்கு யார் பெயரில் பட்டா, சிட்டா இருந்தது என்றால் அது எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.4 கிரைய ஆவணங்களில் அவிநாசி சார்பதிவாளர் அலுவலக முத்திரை மற்றும் ஸ்டாம்ப் இல்லை என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் அது எனக்கு தெரியாது.

3. எனது பிரமாண வாக்குமூலத்தில் அசுதுல்லா சாய்புவிற்கு ஒரு முகம்மது யூசப் சாய்பு மட்டும் தான் வாரிசு என்பதற்கு அது சம்பந்தப்பட்ட வாரிசு சான்று எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி அசதுல்லா சாய்புவிற்கு சொத்தில் பாகம் இல்லை என்றும், இந்த நிலையில் அவரது மகனான முகம்மது யூசுப் சாய்பு என்பவரிடமிருந்து 31.05 ஏக்கர் பூமியில் பொதுவில் 30/112 பாகமான 8.31–1/2 ஏக்கர் பூமியை எனது அப்பா 13.07.1967–ம் தேதியில் கிரையம் பெற்றதாக சொல்வது தவறு, அந்த முகம்மது யூசுப்பிற்கு கிரையம் கொடுக்க உரிமை இல்லை

என்று சொன்னால் சரியல்ல. அதேபோல், பைசுல்லா சாய்புவின் பெண் மகளான ஆஹபீபி என்பவருக்கு சொத்தில் உரிமை இல்லாத நிலையில் அவரது வாரிசுகளிடமிருந்து 31.05 ஏக்கர் பூமியில் பொதுவில் 15/112 பாகமான 4.16 ஏக்கர் பூமியை எனது அப்பா 06.09.1967–ம் தேதியில் கிரையம் பெற்றதாக சொல்வது தவறு என்றால் சரியல்ல. எனது பிரமாண வாக்குமூலத்தில் ஒரு சமீர் பேக் என்பவரின் மனைவி மாஜீமி பீவி என்பவரிடமிருந்து 31.05 ஏக்கர் பூமியில் பொதுவில் 7/112 பாகமான 1.94 ஏக்கர் பூமியை எனது அப்பா 06.09.1967–ம் தேதியில் கிரையம் பெற்றதாக சொல்வது தவறு என்றால் சரியல்ல. அவர் பைசுல்லா சாய்புவிற்கு எந்த வகையில் உறவு என்பதை பொறுத்து கூறவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அதேபோல், 31.05 ஏக்கர் பூமியில் பொதுவில் 15/112 பாகமான பொதுவில் 1/4 பாகம் அதாவது 1.04 ஏக்கர் பூமியை எனது அப்பா 29.11.1967–ம் தேதியில் கிரையம் பெற்றதாக சொல்வது தவறு என்று சொன்னால் சரியல்ல. அதனால், மேற்படி வீதம் எனது அப்பா சொத்திற்கு உரிமை உள்ள நபர்களிடமிருந்து கிரையம் பெறவில்லை என்று சொன்னால் சரியல்ல. மொத்த சொத்தான 31.05 ஏக்கரில் எனது அப்பாவிற்கு கிரையம் பெற்ற வகையில் 15.45–1/2 ஏக்கர் சொத்து பாத்தியம் என்று சொல்வது தவறு என்றால் சரியல்ல.

4. எனது அப்பா சொத்தை கிரையம் பெறுவதற்கு முன்பாக அந்த சொத்துக்களை 12,13 பிரதிவாதிகள் குத்தகைக்கு பயிர் செய்து வந்தார்கள் என்றால் சரிதான். அவர்கள் முகம்மது யூசப் சாய்பு, பாபூதீன் மற்றும் அசுருதீன் வகையறாவிடமிருந்து குத்தகை இருந்தார்கள். எனது பிரமாண வாக்குமூலத்தில் பாரா 8–ல் சொல்லியுள்ள சுல்தான்மைதீன்சாயபு, அப்துல்சாபன்சாயபு, அமீனுதீன்சாயபு மற்றும் அமானுல்லாசாயபு ஆகியோர்

ஒரு பாவூதீன் சாய்புவின் ஆண் வாரிசுகள் என்றால் சரிதான். 1912–க்கு பின்னிட்டு பைசுல்லா சாய்பு இறந்து போன பிறகு அவரது மகன் பாவூதீன் சாய்புக்கு பாத்தியப்பட்டிருந்து அவர் இறந்துபோன பிறகு அவருடைய நான்கு ஆண் வாரிசுகள் தான் சொத்துக்களை அடைந்து அனுபவித்து வந்தார்கள் என்றால் சரியல்ல.

**(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வேண்டி ஒத்திவைக்கப்படுகிறது)**

**Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.**

C SENTHIL KUMAR
Digitally signed by C SENTHIL KUMAR
Date: 2025.11.04 14:09:03 -0200

**Subordinate Judge,**
**Avinashi.**